# SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

## FIRST YEAR EXAMINATIONS IN BACHELOR OF BUSINESS ADMINISTRATION / COMMERCE (EXTERNAL) - 2009 / 2010 HELD IN AUGUST - 2010

## BBA / COM 16 (I) – FINANCIAL ACCOUNTING – I

**எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.** **நேரம் : 02 மணித்தியாலங்கள்**

---

01. (அ) நிதிக்கூற்றுக்களின் நான்கு பாவனையாளர் குழுக்களை அடையாளங் காண்க.
(2 புள்ளிகள்)

(ஆ) தகவல் பாவனையாளர் குழுக்கழுக்கு பொதுவாக ஏன் கணக்கியல் தகவல்கள் அவசியம் என்று விளக்குவதோடு, அவர்களுக்கு எவ்வாறான தகவல்கள் தேவைப்படுகின்றன என்பதனையும் குறிப்பிடுக. இரண்டு தகவல் பாவனையாளர் குழுக்களை உதாரணமாகத் தெரிவு செய்து அவர்களுக்குத் தேவைப்படும் குறிப்பிட்ட தகவல்களை குறிப்பிடுவதோடு என்ன நோக்கத்திற்காக அவர்கள் அத்தகவல்களை வேண்டி நிற்கின்றனர் என்பதனையும் குறிப்பிடுக.
(8 புள்ளிகள்)

(இ) கீழ்வரும் மூன்று கணக்கியல் எண்ணக்கருக்களையும் விளக்கி, அவற்றினை பயன்படுத்தும் ஒவ்வொரு சந்தர்ப்பத்தினதும் உதாரணத்தை தருக.

(i) தொடர்ந்து இயங்கும் எண்ணக்கரு (Going concern)
(5 புள்ளிகள்)

(ii) அட்டுறுக் கோட்பாடு (Accruals).
(5 புள்ளிகள்)

(iii) நிலைத்திருத்தல் எண்ணக்கரு (Consistency).
(5 புள்ளிகள்)

(மொத்தம்l 25 புள்ளிகள்)

02. கீழ்வரும் நிதிக்கூற்றுக்கள் M plc நிறுவனத்தினுடையதாகும்.

**31 மார்ச் 2009 இல் முடிவடைந்த ஆண்டுக்கான இலாப நட்டக் கணக்கு**

| | **ரூபா.000** |
|---|---|
| விற்பனை | 1,670 |
| விற்பனைக் கிரயம் | (870) |
| மொத்த இலாபம் | 800 |
| செயற்பாட்டுச் செலவுகள் | (415) |
| பெறுமானத் தேய்வு | (250) |
| நிலையான சொத்து விற்பனை மீதான நட்டம் | (5) |
| செயற்பாட்டு இலாபம் | 130 |
| வட்டி | (15) |
| பங்கிலாபம் | (70) |
| வருடத்திற்கான பகிரப்படாத இலாபம் | **45** |

31 மார்ச் 2009 இலும் 2008 இலும் உள்ளபடியான ஐந்தொகைகள்

| | ரூபா. 000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
|---|---|---|---|---|
| **நிலையான சொத்துக்கள்** (குறிப்பினைப் பார்க்க) | | 980 | | 700 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | | |
| இருப்பு | 70 | | 65 | |
| கடன் பட்டோர் | 175 | | 215 | |
| வங்கியும் காசும் | 50 | | 65 | |
| | **295** | | **345** | |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | | |
| வியாபாரக் கடன் கொடுத்தோர் | (100) | | (85) | |
| நிலையான சொத்து கடன் கொடுத்தோர் | (20) | | 0 | |
| நிலுவையாக உள்ள வட்டி | (5) | | (10) | |
| பங்கிலாபம் | (65) | | (60) | |
| | **(190)** | | **(155)** | |
| **தேறிய நடைமுறைச் சொத்துக்கள்** | | 105 | | 190 |
| | | **1,085** | | **890** |
| **நீண்ட காலக் கடன்** | | | | |
| கடன் | | (200) | | (250) |
| | | **885** | | **640** |
| | | | | |
| பங்கு மூலதனம் | | 700 | | 600 |
| பங்கு வட்டக் கணக்கு | | 100 | | 0 |
| இலாப நட்டக் கணக்கு | | 85 | | 40 |
| | | **885** | | **640** |

குறிப்பு: M plc ஆனது 31 மார்ச் 2009 இல் முடிவுற்ற அண்டுக் காலப்பகுதியில் ரூபா. 550,000 ற்கு நிலையான சொத்துக்களை கொள்வனவு செய்தது.

**M plc நிறுவனத்தின் காசுப்பாய்ச்சல் கூற்றினை நேர் முறையைப் பயன்படுத்தி தயாரிக்குக.**

(30 புள்ளிகள்)

03. ஜம்பூ நிறுவனம் தனது பொருட்களை ஒவ்வொன்றும் 50 ரூபா. கிரயமுடைய கொள்கலன்களில் விற்பனை செய்கிறது. அக்கொள்கலன்கள் மூன்று மாத காலத்தினுள் நல்ல நிலையில் திருப்பி அனுப்பப்படும்போது வாடிக்கையாளர் மீது ஒரு கொள்கலனுக்கு ரூபா. 75 விதிக்கப்படுகின்றது.

வருட இறுதியில் கணக்கியல் நோக்கத்திற்காக கம்பனிக்குச் சொந்தமான கொள்கலன்கள் (தொழிற்சாலைக்கு உள்ளே காணப்பட்டாலும் சரி அல்லது வாடிக்கையாளரின் கைகளில் காணப்பட்டாலும் சரி) ஒரு கொள்கலன் ரூபா. 25 படி மதிப்பிடப்படுகின்றது.

01 ஜனவரி 2009 இல் கம்பனியானது தொழிற்சாலையில் 240 கொள்கலன்களையும், வாடிக்கையாளர்களின் கைகளில் மூன்று மாதங்களுக்குக் குறைவான 300 கொள்கலன்களையும் கொண்டிருந்தது. 2009 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 200 கொள்கலன்கள் கொள்வனவு செய்யப்பட்டன. 600 கொள்கலன்கள் வாடிக்கையாளருக்கு அனுப்பப்பட்டன. இதில் 560 கொள்கலன்கள் மாத்திரமே குறிப்பிட்ட காலத்தினுள் திருப்பிப் பெறப்பட்டன. மீதி 20 கொள்கலன்கள் மூன்று மாத காலம் தாண்டியும் வாடிக்கையாளர்களால் வைத்துக்கொள்ளப்பட்டன. வருட காலப்பகுதியில் ஒன்று ரூபா. 10 படி 8 கொள்கலன்கள் விற்பனைசெய்யப்பட்டதோடு 3 கொள்கலன்கள் மீதப் பெறுமானமிடப்பட்டன.

31 டிசம்பர் 2009 இல் இருப்பு கணிப்பிடும்போது 9 கொள்கலன்கள் பாவனைக்கு உதவாததாகக் காணப்பட்டது.

**வேண்டப்படுவது:**

வருடத்திற்கான பின்வருவனவற்றைத் தயாரிக்குக.

(i). கொள்கலன்கள் கணக்கு

(ii). ஜம்பூ நிறுவனத்தால் கொள்கலன்கள் மீது உழைக்கப்பட்ட இலாபத்தினை அல்லது நட்டத்தினைக் காட்டக்கூடிய கூற்று.

(20 புள்ளிகள்)

04. 31 டிசம்பர் 2009 இலும் 30 ஜுன் 2010 இலும் ஒப்பந்தக்கணக்கை தயாரிக்குமாறும், அவ்வாண்டுகளில் இலாப நட்டக்கணக்குகளில் செலவு வைக்க வேண்டிய பெறுமதியினையும் கணிப்பீடு செய்யுமாறும் வேண்டப்படுகின்றீர். 1 ஏப்ரல் 2009 இல் MN நிறுவனம் ஒப்பந்த வேலையொன்றை ஆரம்பித்தது. இவ்வொப்பந்தமானது 30 ஜுன் 2010 இல் ரூபா. 520,000 என்ற ஏற்றுக்கொள்ளப்பட்ட விலையில் பூர்த்தி செய்ப்படவேண்டியதாகும். 31 டிசம்பர் 2009 இல் முடிவுற்ற நிதியாண்டில் MN நிறுவனத்திற்கு ஏற்பட்ட மொத்தச் செலவுகள் கீழ்வருவனவற்றைக் கொண்டவையாக ரூபா. 254,000 ஆகும்.

| | ரூபா |
|---|---|
| இயந்திரம் | 30000 |
| மூலப் பொருட்கள் | 124000 |
| கூலி | 95000 |
| சில்லறைச் செலவுகள் | 5000 |

31 டிசம்பர் 2009 இல் பெறப்பட்ட காசு ரூபா. 198,500 ஆனது அத்திகதியில் பூரணப்படுத்திய வேலையில் உறுதிப்படுத்தப்பட்டவற்றில் 75 வீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. மேலும் ரூபா. 30,000 பெறுமதியான வேலைகள் பூரணப்படுத்தப்பட்டும் உறுதிப்படுத்தப்படாமல் காணப்படுகிறது.

பாவனைக்கு பொருத்தமற்றதாகக் காணப்பட்ட ரூபா. 8,000 கிரயத்தையுடைய மூலப்பொருட்கள் ரூபா. 9,000 ற்கு விற்பனை செய்யப்பட்டன. 31 டிசம்பர் 2009 இல் பாவிக்கப்படாத மூலப்பொருட்களின் இருப்பு ரூபா. 10,000 எனவும் இயந்திரம் ரூபா. 20,000 எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது. 30 ஜுன் 2010 இல் ஒப்பந்தத்தை பூரணப்படுத்துவதற்கு கீழ்வருவன திட்டமிடப்பட்டுள்ளன.

அ. கீழ்வரும் மேலதிக செலவுகள் ஏற்படும்:

| | ரூபா |
|---|---|
| கூலி | 64000 |
| மூலப் பொருட்கள் | 74400 |
| சில்லறைச் செலவுகள் | 9000 |

ஆ. ரூபா. 25,000 பெறுமதியான இயந்திரமொன்று தேவைப்படுகின்றது

இ. ஒப்பந்தத்தில் பயன்படுத்திய எல்லா இயந்திரங்களினதும் மீதப்பெறுமதி ரூபா. 15,000 ஆகும்.

(25 புள்ளிகள்)

***